**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**அசல் வழக்கு எண். 51/2018**

PW1 – திரு.ஜான் நாள். 19.07.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. தாவா சொத்திற்கு அருகில் உள்ள சர்வே எண்.162/32 என்ற சொத்திற்கு எனது சகோதரர் அந்தோணிக்கு எப்போது ஒப்படைப்பு பட்டா வழங்கப்பட்டது என்றால் 2017 ஆண்டு ஆகும். எனது சகோதரர் திருமணம் ஆகாமல் பாதிரியாராக வெளிநாட்டில் உள்ளார் என்றால் சரிதான். எனது சகோதரர் எந்த வருடம் பாதிரியாக ஆனார் என்றால் 2009 ம் ஆண்டு ஆகும். மேற்படி எனது சகோதரர் பாதிரியார் ஆனப்பின்னர் வெளிநாட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் இங்கு பாம்பன், தேவகோட்டை, காளையார்கோவில், திருச்சி போன்ற இடங்களில் பாதிரியாக பணியாற்றி விட்டு பின்பு தான் வெளிநாட்டிற்கு சென்றுவிட்டார். எந்த வருடம் எனது சகோதரர் வெளிநாட்டிற்கு சென்றால் என்று சரியாக தெரியவில்லை. மேற்படி வழக்கிற்காக எனது சகோதரர் எப்போது வெளிநாடு சென்றார் என தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. நான் செங்குடி பஞ்சாயத்தில் பிரசிடண்ட் ஆக உள்ளேன் எனது மனைவி பரிமளா வரவணி ஊராட்சியில் செயலாளராக பணியுரிந்து வருகிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் "செண்ட் ரூ இ செ" என

குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் "இதற்குள் தோட்டம் 17 குலு" என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களுக்கும் எந்த வொரு சம்பந்தமும் இல்லை என்றும் மேற்படி ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள விஸ்தீரணங்களுக்கும் தாவா சொத்தில் சொல்லப்பட்டுள்ள விஸ்தீரணம் மற்றும் நான்குமால்களுக்கு எந்தவொரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் வழக்கிற்கும் மேற்படி ஆவணங்களுக்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நாளது தேதி வரை தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல எனது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. எனது அனுபவத்தில் தாவா சொத்து இருந்து வருகிறது என சொல்வதற்கு எந்தவொரு ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

<u>2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 2017 ம் ஆண்டு எனக்கும் எனது சகோதரருக்கும் இடையில் நடந்த தாவா சொத்துக்கள் உள்ளிட்ட பொது சொத்துக்களுக்கான வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்யும்போது ஆவணங்களை பார்த்துதான் பாகப்பிரிவினை செய்யப்பட்டதா என்றால் ஆவணங்களை பார்க்கவில்லை. மேற்படி பாகப்பிரிவினை நடக்கும்போது தாவா சொத்து அரசு நத்தமாக இருந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அரசுக்கு பாத்தியப்பட்ட இடத்தை நாங்கள் பாகப்பரிவினை செய்து கொண்டோம் என்றால் எங்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தை அரசு நிலமாக மாற்றப்பட்டு 1 ம் பிரதிவாதி பெயருக்கு ஒப்படைப்பு பட்டா

வழங்கப்பட்டது. தாவா சொத்து எந்த வருடம் அரசு நிலமாக மாற்றப்பட்டது என்றால் எஸ் எல் ஆர் காலமான 1954 ம் ஆண்டு மாற்றப்பட்டது 2017 ல் தான் மேற்படி விவரம் எனக்கு தெரிய வந்தது.

2. தாவா சொத்திற்கு பட்டா கேட்டு வருவாய் துறையில் மனு தாக்கல் செய்திருந்தேனா என்றால் கிராம நிர்வாக அலுவலரிடம் வாய்மொழியாக கேட்டுள்ளோம். இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியரிடமும், வட்டாட்சியரிடமும் எதற்காக வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 மனுக்கள் கொடுக்கப்பட்டது என்றால் 1 ம் பிரதிவாதி பெயருக்கு கொடுக்கப்பட்ட பட்டாவை எதிர்த்து கொடுத்தேன். மேற்படி மனுக்கள் நிலுவையில் உள்ளது. இவ்வழக்கில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

3. எனது தாயார் லூர்து மேரிக்கும் எனது சகோதரர் அந்தோணிக்கும் நத்தம் நிலத்தை அனுபவம் செய்ததன் அடிப்படையில் ஒப்படைப்பு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தை 1 ம்பிரதிவாதி அனுபவம் செய்து வந்தார் என்றும் சட்ட விதிகளின் படி ஒப்படைப்பு பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்கள் வழக்கிற்காக பிரச்சனை ஏற்பட்ட பிறகு பொய்யாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் கேட்க கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல, வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாடானை